94

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
4 - OCT 1917
MADRAS

ஸ்ரீ

ஸ்ரீமத் ஹயக்ரீவாயநம:

பரங்கிப்பேட்டை என்று வழங்கும் முத்துக்ருஷ்ணபுரி எல்லையம்மன் பேரிற் பதிகம்.

(உரையுடன்)

திருவெண்ணெய் நல்லூர்

ஸ்ரீமான் நரசிம்மபாகவதரவர்களால்

இயற்றியதை,

பரங்கிப்பேட்டை கங்கைகுலச் சிரேட்டரும்,

ஆரிய வம்சஸ்தருமான

சிராங்கு பா. மாணிக்கச்செட்டியாரவர்களால்

சிதம்பரம்

...ந்தரவிலாசம் அச்சுக்கூடத்தில்

...திப்பிக்கப்பெற்றது.

27—9—17

Q25:38·211PP
M·17.
175971

OCT 1917 MADRAS

ஸ்ரீ

ஸ்ரீமத் ஹயக்ரீவாயநம:

நான்முகம்

உலகம் மூன்றுக்கும் உரியதான சக்தித் திரயம் இச்சையாலுங் கிரியையாலும், அறிவரிய ஞானத்தாலும், விளக்குவதாயின. இவ்வரிய சக்திகள் மூன்றிலுள் ஞானசக்தி ப்ரபலம். இதையடைவா னிச்சையையுங் கிரியையும் அன்றி பெறப்படாத அரும்பொருளாதலால் இடையிலுள்ள கிரியையே இதற்கு ஸஹகாரியாகக் கொண்டுதான் அடைய வேண்டிய ஞானத்தின் இச்சையை கிரியையினாற் பெறவேண்டும்.

இத்தகைய சக்திகள் மூன்றுந் தெய்வ நிலையானதால் மனிதஜென்மத்திற்குப் பெறவேண்டியவற்றுள் இவை ப்ரதானமானவைகள். ஈஸ்வரன் ஸர்வலோகாந்தர்யாமியாய் சுத்தா சுத்தங்களினும் நிறைந்து அருள் விளக்குவது தம்மின் முச்சுடரான இவ்வரிய சக்திகளைக் கொண்டே என்பது வேத ஸம்மதம்.

அவ்வது பெருமையை விளக்கும் தேவர்களிலும் இச்சக்தியாசாரவனுட்டானங்கள் உபாசன முறையிற் கொண்டாடுவது ச்ருதி ப்ரமாணம்.

மங்களகரமான இவ்வரிய சக்தியாதிகளாகிற ஸ்வரூப பக்தி ஈஸ்வரனை யடையுமுபாயத்தையுங் கல்பிக்கிறது.

ஆதலான் அருளைப் பெறவைக்கும் இவ்வரிய சக்தியானமாதாவை வணங்கிப் பதிகஞ் சொல்வான் பெரியாரடிகளைத் துணை கொண்டு நடுநாட்டின் கீழெல்லையான இப்பரங்கிப்பேட்டையை கூறவந்தனன். (நீட்டோலை வாசியானின்னருள் குறிப்பறியமாட்டாதவனன்மா) மொக்க விளங்கும் எனது புல்லறிவை போராது (தன்னை விட்டு நீங்கித் தேசாந்த்ரவாசியான புத்திரனைக்கண்ட தந்தைபோ) லாண்டு ஆணைத்தங்கீகரிக்க வேண்டுபவன் ஈண்டுமெனைத் தூண்டி இவ்வெல்லம்மை பாலிச்செய்யுளைச்செய்ய விரும்பினவரும் கங்கைகுலச் சிரேட்டரும் ஆரிய வம்ஸத்தருமான ஸ்ரீமான் சிராங்கு பா. மாணிக்கசெட்டியாரவர்கட்கு மிக்க நன்றியறிதலுள்ளோனாயிருக்கக் கடவேன்.

எல்லாம்வல்ல யிறைவனான எம் பாண்டுரங்கன் திருவடிகள் வாழ்க.

வேண்டும்,

நரசிம்மபாகவதன்.

17597
1755

உ

ஸ்ரீமத் ஹயக்ரீவாயநம:

சீர்பெறும் பரங்கிப்பேட்டையின் னரிய
தென்னூருக்குண திசை யமர்ந்த
செல்வமும் புகழுந்திறலணைபார்ய
மாந்திரத் துண்ணிறை செல்வி
வாரணி கச்சையின் தனத்தொடியாம்
மங்கைமாவெல்லையம்மாரி
வரகுணத்தடிகொள் பதிகமும் முறையும்
வாழ்த்திடுகவியுரையென்று
காரணிக்கங்கை குலமதியார்வக்
கவினநன்னெறியுரைகணியன்
கதிதரும்மாரி பதிகமே வரையக்
காட்டிய நான் நளவருடம்
பேர்பெறுமாடி பூர்வபக்கத்து
பிறங்கிய வெள்ளியன்றனிற்
பேசிடவைத்தான் சிராங்குபா
வென்னும் மீருபர்மாணிலமணியே.

1733
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
4 OCT 1917
MADRAS

ஸ்ரீ

ஸ்ரீமத்ஹயக்ரீவாயநம:

பரங்கிப்பேட்டை என்னும் முத்துக்ருஷ்ணபுரி
ஸ்ரீ எல்லையம்மன் பதிகம்.

விநாயகர் காப்பு.

வெண்பா.

பூமேவு முத்துக்ருஷ்ணப் புரி யெல்லையம்மன் மேற்
பாமேவு நற்பதிகம் பாடவருள்——காமேவுங்
கற்பகத்தை யைங்கரனைக் கார்மேகத் தண்ணலின்செம்
பொற்பதத்தை யென்னுளும் போற்று.

(இன்) (பூ) பூமியில் (மேவும்) இராநின்ற (முத்துக்ருஷ்ணபுரி) ப்ருக்ருதம் பரங்கிப்பேட்டை யென்று வழங்கும் முத்துக்ருஷ்ணப் புரியில் எழுந்தருளியிருக்கும் (எல்லையம்மன் மேற்) நடுநாட்டின் கீழெல்லையில் (அதாவது கீழ் கடலெல்லையில்) விளங்கும் பாரியான எல்லையம்மன்மீது (பாமேவு) பாட்டாலிசைக்கும் (நற்பதிகம்) நல்ல பத்து விருத்தங்களினுல் (பாடவருள்) பாடும்படியான கடாக்ஷத்தைச் செய்யும் (கற்பகத்தை) வேண்டியவைகளைக்கொடுக்கும் தேவலோக கற்பகத்தருவைப் போலிராநின்றவனை (ஐங்கரக் காரணனை;) தும்பிக்கையோடு நான்கு கரங்களுஞ்சேர்ந்து ஐந்து கரத்தானை மேகநிறத்தைப்போன்ற (கார்மேகத்தண்ணல்) குளிர்ச்சியான மேகம்போன்ற அருளினைப் பெய்யும் பெரியான் (இன்) இனிய (பொற்பதத்தை) பொன்னிறத்திருவடிகளை (என்மனனே.) என்னிட அறிவே (போற்று) வணங்குவாயாக. எறு.

நூல்.

கடலுலகு நற்றவக்காட்சி தருமெஞ்ஞான
கல்விநிலை யாருபொருளாங்
கண்டவர் தமக்குமீள வெண்டான மளிபோற்
கனிந்து பாலிக்குமமுதைக்

சடமுளொலி மாருத மெனுடைமை பலவிதமுப்ப
சாட்சிடரமாத்ம நிலையாய்
சங்குவளையங்கையொளி ரிங்கிதமிலங்குமணி
தங்கும் வரமங்கை யருளாய்
படமரவினிழலி னெறியுடனமரும திவதன
பாவையே பச்சைமுகிலே
பாவினறை பெருமுத மாமலரினேர்பவள
பாணியே யலிவேணியே
மடலவிழுமப்புபக்கண்ணி யெமதன்னையே
மாமுத்துக்ருஷ்ணபுரிவாழ்
மாரிசுகுமாரி கருணாரி வரதாரியருண்
மாரியெல்லம்லமயுமையே.

(இ-ள்) கடலுலகு-சமுத்திரஞ் சூழ்ந்த வுலகத்தில், விலைபாகு பொருளாம்— சாஸ்வதமான செல்வமாகும், மெஞ்ஞானக்கல்வி— உண்மைத் தெளிவினது வித்தையை நற்றவக்காட்சி-நலமாகிய தவப்பேற்றின் விளக்கத்தால், கண்டவர்-பார்த்தவர்கள், தமக்குளே-தம்மின் இருதயத்துள்ளே, வெண்டாளமணிபோற்-வெண்முத்தாய வீர்த்திகலைபோல், களிந்து—இலகி, பாலிக்குமமுதச்-பயக்கும் அமுதத்தினை, சடமுளொலி-உடற்குள் ஒலிக்கும்படி, மாருதம்—வாயுவினுல், மென்னுடைமை-மெதுவான யறிவைக் கொண்டு, பலவிதமுப்ப—அனேக விதமான கொள்கையினுல் த்ருப்தியடைய, பரமாத்ம நிலையாய்—ஆண்டானடிமைத்திறங் காட்டும் ஸ்திரமாய், சங்குவளை—சங்கினுற் செய்த வளைசூழ்ந்ததும், ஒளி—பிரகாசானதும், இங்கிதமிலங்குமணி—சுகுதத்தையிலக்கும் நவரத்தினமணிகளுமிழைத்த, அங்கை—அழகியகையினுல், வசந்தங்கும்—வரத்தை பாலிக்கும், மங்கை—மாதர்க்கரசியே, யருளாய்—அருள் செய்வாய், படமாவினிழலின்—படத்தையுடைய ஆதிசேஷன் னிழலில், னெறியுடன்—விலக்கணத்துடன், அமரும்—எழுந்தருளும், மதிவதன—பூர்ணசந்திர விகாசமான முகத்தையுடைய, பாவையே—பெண்களுள் திலதம்போன்றவளே, பச்சை முகிலே—மரகதச்சாயலான மேகமே, பாவின

றையே—கரும்பின் இரசமே, குமுதமாமலரின்—பெருமை தங்கிய குமுதமலரின், னேர்—ஒப்ப, பவளபாணியே—பவள நிறக் கையே, யளிவேணியே—நெடிய பின்னற்சடையுடையாளே, மடலவிழும்புயம்—இதழ் விரிந்ததாமரை போன்ற, கண்ணி—நயனமுள்ளவளே, வரமங்கையே—அநுபக்ஷிக்கும் வரத்தை கொடுக்கும் தாயே, மா—பெருமை பொருந்திய, முத்துக்ருஷ்ணபுரி—முத்துக்ருஷ்ணபுரி யென்னும் பரங்கிப்பேட்டையின், வாழ்—நிரந்தரமாய் விளங்கும், மாரி—மாரியென்னும் பெயரும், சுகுமாரி-வனப்பினாலும், கருணாரி-தயவினாலும், வரதாரி-வரத்தினாலும், யருள்—யருளினாலும், மாரி—வருஷத்தைப்போற்பெய்யும், எல்லம்மை-எல்லையம்மை யென்னும், உமையே-பசார்த்பரியே. என்றவாறு.

தன்னியலெனுதல்ல தங்குமதியல்லமற்
றுங்குபொருளல்லவல்ல
தாரணிசுகப் பேற்றினாற் பெறுந்தகையல்ல
சந்ததிப்பேரதல்ல
பன்னியபடிப்பிணைப் பகபல்லபாவல்ல
பற்றுமொரு பயனுமல்ல
பாங்கானதவமல்ல பரிவினாற்பயனல்ல
பணிதொழிற் பாற்றதல்ல
அன்னியரினுறவல்ல வரவல்லதரவல்ல
ஆட்சிதரு மாட்சியல்ல
அவமல்லதவமல்ல வெங்காரமனவிலிகு
அந்தமிற்சிந்தைநோயேன்
மன்னியபெருங்கருணை யருள்வேண்டினேனருள்
மாமுத்துக்ருஷ்ணபுரிவாழ்
மாரிசுகுமாரி கருணாரி வரதாரி அருண்
மாரியெல்லம்மை யுமையே,

(இ-ள்) தன்னியலெனுதல்ல—தன்னாலாகும்படியான தென்று சொல்வது மின்று, தங்குமதியல்ல—நிலைத்த புத்தியுமன்று. மற்றுங்கு பொருளல்ல—மற்றும் தாங்கும்படியான வஸ்துவும் அல்ல, வல்லதாரணி—எல்லாமதிகரித்த இப்புவியின், சுகப்பேற்றினாற்

பெறும்—இன்பப் பெருக்கினாலடையும், தகையல்ல—விஷயமும் அல்ல, சந்ததிப்பேரதல்ல—குடித்தனப்பெயருமல்ல, பன்னிய படிப்பினைப் பதமல்ல—விளக்கத்தக்க வித்தையின் வாசகமல்ல, பாவல்ல—கவியுமல்ல, பற்றுமொருபயனுமல்ல—அதை பெறுவதொரு பிரயோசனமும் அல்ல, பாங்கான—நன்மையான, தவமல்ல—விரதமும் அல்ல, பரிவினாற்பயனல்ல—இச்சையினாலும் பயனில்லை, பணிதொழிற் பாற்றதல்ல—செய்யுந் தொழிலுக்குச் சம்பந்தப்பட்டதல்ல, அன்னியரின்—சம்பந்தப்படாத யிதராளின், உறவல்ல—சிநேகமுமல்ல, வரவல்ல—வருத்தமல்ல. தரவல்ல ஆட்சி—நிலைக்கத்தகுந்ததை கொடுக்ககூடிய, தருமாட்சி—பிரபலமான பெருமையும், அல்ல—இல்லை, அவமல்ல—பாபமுமல்ல, தவமல்ல—சாதனமுமல்லதான, வெங்காரம்—கொடுமையான செய்கையை, அளவிடு—எண்ணிக்கையில்லாது செய்யும், அந்த நிர்நிந்தை—முடிவிலாத எண்ணத்தைக் கொண்ட, கோபேன்—பாவப்பொதியுள்ளேன், மன்னிபெருங்கருணை—விளக்கமான நின்னருமைக்கடாக்ஷத்தின், அருள்வேண்டினேன்—கிருபையை யாசித்தேன், மாமுத்துக்ருஷ்ணபுரிவாழும் மாரியே தாயே. என்றவாறு.

தருமனன்னெறிதழைத் தோங்கமெஞ்ஞானக்
　தழைத்தோங்கவுலகமுழுதும்
தங்குமுபிராதாரமெங்கும்பரந்துவளர்
　தன்னியவருட்பிழம்பே
சருவசரணிய பரமதாயகியேலாற்
　றுங்குமொருபொருளுமுண்டோ
சாந்தகுணமாந்தி யருளேந்தியருள்காந்தியே
　தாந்திபல சாந்திபரமே.
கருமமுக்குணவலச்சேட்டையொடுகூடிவனக்
　காரகப்பந்தமுள்ளே
கரையுமனமாகி நின்காலருள்பெறக்காட்சி
　காமாட்சிகருணைபுரிவாய்
வருணமைக்காரு பூத்தொனிர்நிலாமுத்தமணி
　மாமுத்துக்ருஷ்ணபுரிவாழ்

மாரிசுகுமாரி கருணாரிவரதாரியருண்
மாரியெல்லம்மை யுமையே.

(இ-ள்) உலகமுழுதும்—இப்பிரபஞ்சமளவினும், தருமனன்னெறிதழைத்தோங்க—நல்விளக்கத்தை தராநின்ற அறமானது விளங்கி வளருக, மெஞ்ஞானம் தழைத்தோங்க—மெய்மையான அறிவுங்கூடி வளருக, தங்குமுயிராதாரம்—இதிற் சஞ்சரிக்கும் ஆத்மகோடிகளின் ஆதாரணையும், யெங்கும்பரந்து—எவ்விடத்தும் விசாரித்து, வளர்—ஜீவிக்கும் படியாக, தண்ணியவருள்—நிம்மதியான கடாக்ஷத்தை செய்யும், பிழம்பே—பரமே, சருவசரணிய—எல்லாவற்றுக்கும் அடைக்கலத்துக்கிடமாகிய, பரமதாகி—மேன்மை தரத்தக்கவளே, நீயலால்—உன்னையல்லாது, தாங்குமொருபொருள்—ஆதரிக்கும்படியான வேறு வஸ்துவும், உண்டோ—உளதோ, சாந்தகுணமாந்தி—சாத்துவீகத்தைக் கொண்டு, அருளேந்தி—கடாக்ஷத்தை பெற்று, அருள்காந்தி—பிரகாசமான கருணைபுரியும், வேதாந்தி—அருமறைக்கும் யந்தமானவளே, பலசாந்தபரமே—பயனைக் கொடுக்கும் பத்ததியான பாவையே, கருமமுகக்குண வலீச்சேட்டையோடு—ஆணவம் மாயைகாமியமான கருமத்தினாற்பல பட்டு அச்செயல் அதிகப்பட, கூடிவளர்—சேர்ந்து வளரும், கார்—அந்தகாரமான, பந்தம்முளம்—தொந்தத்தைக் கொண்டவன், கரையுமனமாக்கி—இவன் இளகும் புத்தியையுடையவனாக்கி, நின்காலருள்—உன்னுடைய இரண்டு திருவடிகளின் கடாக்ஷத்தை, காமாட்சி—ஏகாமாட்சியே, கருணைபுரிவாய்—கிருபைசெய்தருளாய், வருமறைக்காடு பூத்தொளிர்—பிரகாசமான ஒளியினாற் தாமரைவனம் பூத்ததென்ன, நிலாமுத்தமணி—தெள்ளியசந்திரக்காச்சலின் வாசல்களையுடைய மாமுத்துக்கிருஷ்ணபுரிவாழ் மாரியே. (எ-று)

பண்டருந்தமிதமுத முண்டவர்களொடுகூடி
பாவனைபழக்கவேண்டும்
பரமதேசிகனருளினல் வார்த்தையுற்றுசெவி
பரிவொடுபணிக்கவேண்டும்
தொண்டர்தங்கட்குறவு வேண்டுமுட்குறைவிலாக்
கொள்கைவேண்டுஞ் சொற்பயன்

றேன்றமதிவேண்டு நன்னடைவேண்டுமுரியபதி
சுகம்வேண்டு மதிவேண்டுமுன்
தண்டாளமலைபணியோதனம்மாதனந்
தவிராதுதர வேண்டுமே
தங்குகருணைக்கடலினமுதமேகமலமலர்
தாங்குசிங்காதனமொளிர்
மண்டலப்பொன்மணி கொழிக்குமலைதேவிவளர்
மாமுத்துக்ருஷ்ணபுரிவாழ்
மாரிசுகுமாரிகருணாரிவரதாரியருண்
மாரியெல்லம்மையுமையே.

(இ-ள்) பண்டருந்தமிழமுதம்—பழமையான அரிய தமிழின் அமிர்தத்தை, உண்டவர்களோடு கூடி—அருந்தினவர்களோடு சேர்ந்து, பாவனைபழக்கவேண்டும்—நடையை அப்பியாசிக்கவேண்டும், பரமதேசிகனருள்—முற்றுமுணர்ந்தஞானியரின் கடாக்ஷத்தின், இன்—நயமான, செவி—காதானது, வார்த்தையுற்று—மொழிகளைக்கேட்டு, பரிவொடு—ஆசையோடு, பனிக்கவேண்டும்—திருப்தியடையவேண்டும், தொண்டர்தங்கட்குறவு-அடியார்களின் சேர்க்கை சம்பந்தம், வேண்டும்-வேண்டுவது, உட்குறைவு—உள்ளத்திற் குறைச்சல், இல்லாக் கொள்கை—இலாத எண்ணமும், வேண்டும்—வேண்டியதே தவிர, முன்—முன்றல், தண்டாளமாலை—வெள்ளியபிரகாசமான முத்தாரங்களும், பணி—ஆபரணங்களும், ஓதனம்—உணவும், மாதனம்—ச்ரேயமான பொருட்குவையும், தவிராது—ஆடங்கமில்லாது, தரவேண்டும்—கொடுக்கவேண்டும், தங்குகருணைக்கடலினமுதமே—கடாக்ஷமே வாரிப்பாகப்பொழியும் அமுர்தமானவளே, கமலமலர்தாங்குசிங்காதனமொளிர்—தாமரை பூக்கள்தங்கிய சிங்கவாகனத்தில் பிரகாசிக்குந்தாயே, மண்டலப்பொன்மணி கொழிக்கும்—வட்டமான செவ்விரத்தினங்களைக்குவிக்கும், அலைதேவி வளர்-சமுத்திராதேவி வளரும்படியான முத்துகிருஷ்ணபுரி வாழும் மாரியே, எ-று.

பஞ்சின்மெல்லடிபரவு மாதவப்பணிநிழற்
　　பதியுமணிபீடமதனிற்
　பரிவுதருபதினாறு கலைபரவுமுகமதிப்
　　பண்ணினேரிசை பூத்திடுங்
கஞ்சுக்ககாமாரி கவினமளிநிறையமுத
　　கரதலாமலகமனையக்
　காட்சிதருமாட்சி காமாட்சிசைதன்யபர
　　மாட்சிபரமாட்சிகதியே
அஞ்சுகப்பொன்னே ரிளங்கிள்ளைவாய்மொழியி
　　னன்னமேயின்னமுதமே
　ஆறுதபுண்மணத்தவமுளேனம்மைநின்
　　னருள்வேண்டுமமையமுற்றேன்
மஞ்சுநிறையாழ்கடற் கூசலிடுமொருவிந்தை
　　மாமுத்துக்ருஷ்ணபுரிவாழ்
　மாரிசுகுமாரிகருணாரிவரதாரியருண்
　　மாரியெல்லமையுமையே.

(இ-ள்) மாதவப் பணிநிழல்—பெருமை தங்கிய பணாமுடி கொண்ட ஆதிசேஷனது நிழலிற், பதியும்--பொருந்திய, மணிபீடமதனில்--நவரத்னங்களிழைத்த சிங்காதனத்தில், பரவும்—விளங்கும், பஞ்சின்மெல்லடி—மிருதுவானதும் பஞ்சை யொத்ததுமான திருவடி, பரிவுதரும்—அன்பைப் பெருக்கி யருளைக் கொடுக்கும், பதினாறுகலைபரவுமுகம்-சோடச கலைகளை விளக்கும் வதனம், மதிப்பண்-அறிவின்னழகை, இன்னேரிசை-இனியதான இணக்கத்துடன், பூத்திடும்-விளங்கவைக்கும், கஞ்சுக்காமாரி—அழகிய சுபமான காமினியே, கவினமளி—விலக்ஷணத்தைத்தரும், நிறையமுதம்—பெருகிய அமிர்தம், கரதலாமலகமனைய-உள்ளங்கை நெல்லிக்கனிபோன்று, காட்சிதருமாட்சி-சேவைதரும் பெருமையை, காமாட்சி—கார்க்குங் ஸ்திரமேயெனத், சைதன்யபரம்—துரியநிலையை, மாட்சி—விளக்கும், வரமாட்சி—இடதுபாகத்தி லினிதமர்ந்து, கதி—மோட்சவிரவதிகத்தை, அம்—அழகிய, சுகம்—பரிவை, பொன்னேரிளங்கிள்ளை—சுவர்ணமயமான இளைய கிளியின், வாய்மொழி—குதலைச்சொல்லொப்ப, யின்— இனிய

தான அருளாளளிக்கும், அன்னமே—தாயே, இன்னமுதமே—இனியதான அமிர்தமே, ஆராதபுண்மனம்—நீங்காதரணத்தினோடு கூடியநெஞ்சத்தின், அவமுளேன்—பாபக்கூடுடையவன அம்மை தாயே, நின்னருள்வேண்டும்—உன் கடாக்ஷத்தைப்பெறவேண்டுகின்ற, அமையம்—சந்தர்ப்பத்தை, உற்றேன்—அமைத்தேன்; மஞ்சு—மேகம், நிறை—நிறைந்த, ஆழ்கடல்-ஆழ்ந்தகடலானது, கூசவிடும்—ஆரவாரிக்கும், ஒருவிந்தை—ஆச்சரியத்தையுடைய மாமுத்துக்ருஷ்ணபுரிவாழ் மாரியே. (எ-று)

வாதபித்தஞ்சிலேத்துமநாடிவழிபிசகி
வந்திடுங்குன்மவலிநீள்
மாறுத்தலைநோய் வலிப்பிளவைபுண்கூடு
வாய்புத்துகண்டமாலை
சேதமுற்றிடுமிரத்தஞ்சிழினமுக்குபுண்
சேராதசூலைவெப்பஞ்
செறிவுதருபாரிசங்கண்ணோய செவிப்புனோடு
தேக்கமொடுசுரம்வலிப்ப
நாதமறியாக்காச்சல் நளிரின்சுரமாகு
நவினநோய்காட்டுமுடலே
நல்குபெருநோயெலாந் தவராதுநின்னடியை
நாடுமடியரைநாடுமோ
யாதவீப்பந்தனிறை மணம்வீசுகாவதம்
மாமுத்துக்ருஷ்ணபுரிவாழ்
மாரிகருமாரி கருணரிவரதாரியருண்
மாரிஎல்லம்மையுமையே.

(இ-ள்) வாதபித்தஞ்சிலேத்துமம்—வாதத்தாலும் பித்தத்தினாலும் சிலேத்துமத்தினாலும் இச்சடத்தைக் கெடாதிருத்தும், நாடி—நரம்பானது, வழிபிசகி—உஷ்ணத்தினாலும் அதிகரித்த மயக்கத்தினாலும் அவை கடினப்பட்ட கோழைச்சளி முதலியனவாலும் தன்னிலைமாறி, வந்திடும்—சம்பவிக்கும், குன்மவலி—கட்டியாக வயற்றில் கட்டி உபத்ரவிக்கும் நோயும், நீள்—நீண்டகாலம், மாறுத—நீங்காத, தலைநோய்—சிரத்தின்வலியும், வலிப்

பிளவை—தொந்தரை செய்யும் பெருங்கட்டியும், புண்கூடு—நீங்காதவ்ரணக்குவியலும், வாய்புத்து—வாயில் உண்டாகும்புத்தைப் போன்ற ரணமும், கண்டமாலை —கழுத்தைச்சுற்றிப்படரும்அழுப் புண்களும், இரத்தம்—ஆதாரமாகிய நல்லிரத்தம், சேதமுற்று—நிறம்மாறியுங் குறைந்தும், இகு—உண்டாகிய, சீழ்அழுக்குபுண்—வெண்மையானதும் நாற்றத்தோடு கூடியதும் அழுகியதுமான ரணங்களும், சேராத—தொடராத, சூலை—இசிவைத்தரும் ஓர் விதமான சூலைநோயும், வெப்பம்—சூடுகண்ட, செறிவு—சகிக்கக் கூடாத உபத்திரவத்தை, தரும்—கொடுக்கும், பாரிசம்—கை கால் முகம் ஒரு பாரிசமாக வலித்து உபத்திரவஞ்செய்யும் நோயும், கண்ணோய்—நயனவியாதியும், செவிப்புண்ணோடு—காதில் உண்டாகும் இகழ்ச்சியென்னும் புண்ணோடு, தேக்கமில்—மீறுத, சுரம் வலிப்ப—கர்ச்சலடிப்பதும், நாதம்—தன்னிலையை, அறியா—ஸ்மரணையில்லாது செய்யும், காய்ச்சல்—சுரமும், நளிர்—நடுக்கமும், ஈனம்—விகாரமும்உள்ள, சுரம்—வலிப்பும், ஆகும்—செய்வதான, நவினநோய்—புதிதுபுதிதாகக்காணும் வியாதியும், நாட்டும்—உண்டாக்கும், உடலே—இத்தேகமே, நல்குபெருநோயெல்லாம்—இப்படி அனுபவிக்கும் குஷ்டமுதலிய வியாதியெல்லாம், நின்னடியை—உன்னருமைத் திருவடியை, தவராது—எக்காலமும் நீங்காது, நாடும்—ப்ரபத்தி செய்யும், அடியரை—தொண்டர்களை, நாடுமோ—சேருமோ சேராது, மாதவிப்பந்தல்—புஷ்பக்கொடிகளால் நிறைந்தகொடிவீடுகள், னிறை—நிறையளவாக, மணம்—வாசனையை, காவதம்—ஒருகாத தூரம், வீசும்—பரிமளிக்கும், மாமுத்துக்ருஷ்ணபுரிவாழ் மாரியே. (எறு)

சித்திரமிழைந்த நவரத்தினப்பீடமுட்
    டெய்வவொளி சோதிகாட்ட
சிரமீதுமணிமகுட முந்துலங்கத்தேசு
    செம்பவளவாயிலங்கப்
பத்திராசனமுட் பதிந்திடுமிருமலர்ப்
    பாதமின்னொளி காட்டிடப்
பணிசதங்கைக் கலீரென்ன சங்குவளையினை
    பாவமின்னுரமெய்ப்ப

சத்திரத்தோடிகாமுளொத்தவிசைநாதமே
கலைசாட்டுமொளியீதென
சாந்தமுறுமந்தகாசத்துணிறைசந்தமே
சருவலோகாநந்தமே
மத்திரக்குழுவினிசையூட்டாது நின்னருள்செய்
மாமுத்துக்ருஷ்ணபுரிவாழ்
மாரிகுமாரிகருணாரி வரதாரிபருண்
மாரியெல்லம்மை யுமையே.

(இ-ள்) சித்திரமிழைத்த—அலங்காரமமைத்த, நவரத்தினப் பீடமுட்—ஒன்பதுவிரத்தினங்களையுடைய ஆசனத்துள், தெய்வ வெளி—தேவதாருவான மின்னலை, சோதிகாட்ட—வெளிச்சமிட்டுத்தெரிவிக்க, சிரமீது—தலையின் மீது, மணிமகுடம்—நவரத்னங்களாலமைந்த கிரீடம், துலங்க—பிரகாசிக்க, தேசு—நிலாத்தோற்றமான ஒளியை, செம்பவளவாய்—செவ்விய பவழச்சாயையுடைய அதரம், இலங்க—தெரியவைக்க, பத்திராசனமுள்-படிப்படியாகவிட்டு, கடைப்படியில் மெத்தையிட்டிருக்கும் ஆசனமுள், பதிந்த—அமர்ந்த, இருமலர் பாதம்—இரண்டு செந்தாமரையை நிகர்த்த திருவடிகள், மின்னொளிகாட்டிட—மறைந்து காட்டும் மின்னலைப்போற்றுலங்க, பணி—சப்தங்கொண்ட, சதங்கை—கெஜ்ஜைகள், கலீரென்ன-சுருதமாய் சப்திக்க, சங்கு—வெண்சங்கினாலமைத்த. வளை-வளையல்கள், யிசைபரவ-நாதங்காட்ட, மின்னாரம்-மின்னிலிடும் ஆபரணங்கள், ஏய்ப்ப-வெளிக்காட்ட, சத்திரத்தோடி—சாமரம் வீசும் பெண்களின், கரமுள்—கைக்குள், ஒத்த—உண்டாகிய, இசைநாதமே—கீதசாரமே, கலைசாட்டும்—வித்தையை அதிகரிக்கும், ஒளி—பிரகாசம், ஈதென—இதுவென, சாந்தம்—அமைதியுடன், உறும்—ஒக்கும், நிறை—அதிகமான, சந்தமே—யோக்கியதையே, மந்தகாசம்—முறுவல் பூத்த புன்னகையாம் இவை, சருவலோகாநந்தம்—உலகுயிர்க்கெல்லாம் ஆனந்தமாக்கும், மத்திரம்-கபடமான, குழுவினிசை—கூட்டப் பெருக்கில், யூட்டாது-சேரவைக்காது, நின்னருள்-உன்னிட கடாக்ஷத்தை, செய்-செய்வாயாக மாமுத்துக்கிருஷ்ணபுரிவாழ் மாரியே.

அருமறைச்செல்வி ஆனந்தசெல்வப்பொருளி
லாகுஞ்செல்வித் தவமுளோர்
அண்டிதொண்டிடு செல்வியாரமுதசெல்வித்துணை
யாகுசெல்விப்புணையினேர்
தருமரைச்செல்வி தமனியமேனிசெல்விகுண
சாந்தமுறுமதனசெல்வி
சந்ததந்தொழு மன்பருளமுவந்தருள்செல்வி
தங்குகருணைச்செல்வியிள்
கருவழிவிடாதருட் கண்ணிறைச்செல்வி
கமலாலயம் பூத்தசெல்வி
கண்டிளியவுருகியார் கனிவுளமதிச்செல்வி
காத்தியாயனிச் செல்வியே
மருவுகுழல்வாசிநின்னருளெனக்கீயுமுத்
தமிழுத்துக்ருஷ்ணபுரிவாழ்
மாரிசுகுமாரிகருணாரி வரதாரியருண்
மாரியெல்லமையுமையே.

(இ-ள்) அருமறைச் செல்வி-அருமைதங்கிய வேதத்தின் செல்வமே, ஆனந்தசெல்வி-முடிவிலாக் களியின் செல்வமே பொருளில்-ஸமஸ்த வஸ்துக்களிலும், ஆகும்-தோற்றும்படியான, செல்வி-செல்வமுடையவளே, தவமுளோர்-பக்திகொண்டோர், அண்டி-அடைந்து, தொண்டிடும்-அடிமைசெய்யும், செல்வி-செல்வமானவளே, ஆரமுதச்செல்வி-தெவிட்டாத ஞானக்ருபைப்பொருளே, துணையாகும்-எக்காலமுமிடைவிடாது காக்கும், செல்வி-நிதியே, புணையின்—மரக்கலத்தின், நேர்—ஒப்பாகத்துணையிருக்கும், தருமரை—கமலத்தினாற் பெறப்பட்ட, செல்வி—இலக்குமியே, தமனியமேனி—பொன்போன்ற தேகத்தைப் பெற்ற, செல்வி—இராக்கினியே, குணம்—புத்தி, சாந்தமுறும்—சமத்தைக்கொடுக்கும், மதன—ஒய்யாரமான, செல்வி—அரசியே, சந்ததம்—எக்காலத்தும், தொழுமன்பர்—பக்திசெய்யும் அடியார்களின், உளமுவர்ந்த அருள்—திருப்தியாயங்கீகரித்த கருத்தின் கண் கடாக்ஷிக்கின்ற, செல்வி—பராபரியே, கருணை—அன்பின் தலைமை, தங்கு—எக்காலத்தும் நீங்காத, செல்வி—நாயகியே,

நீள்—நெடியதான, கருவழி—வயற்றிற் பிறந்திருக்குந்திசையை விடாது—அதிற் செல்லவொட்டாது செய்யும், செல்வி—செல்வமே, கமலாலயம்—தாமரைக்கோவில், பூத்த—விகசித்தென்ன விளங்கும், செல்வி—ராணியே, கண்டினும்—கற்கண்டினும், இனிய—இன்பத்தைத்தரத்தக்கதான, உருசிதரும்—மேலமுதத்தைக்கொடுக்கும், கனிவுள-பச்சாதாபமுள்ள, மதிச்செல்வி-அறிவின் ஞானச்செல்வியே, காத்யாயனிச்செல்வி—பராபரையான தெய்வமே, மருவுகுழல்—இயற்கைமணமுள்ள கூந்தல், வாசி—நிறை சந்தத்தை வீசும், உத்தமி—வீரபத்னித்தாயே, நின்னருள்—உன்னிடகடாக்ஷத்தை, பெணக்கியும்—என்றனுக்கருளும், முத்துக்ருஷ்ணபுரிவாழ் மாரியே. (எறு)

நறைதுளிர்த்திடுமலர்க் காடுபூத்தென்னவொளிர்
        நாயகி நந்துதிர்த்த
நவமானநித்திலக் கோர்வைபூணுழுகுமணி,
        நந்தமர்க் காக்ஷியென்ன
நிறையளிக்குழுவலர்த்தும் மரியமலராட
        சிறுவண்டி னிசையினார்ப்ப
சிலமணிநவரத்ன கோலமணிசெய்யமணி
        சிரணியிலங்கு மணியே
கறைமனத்தவனெனக் கருதாதெனக்குன்னருள்
        காணவந்திடு தலைமையும்
காணுதகாக்ஷியொன் றுளதெனவுரைகொண்ட
        கட்டுரையெனுங் கதியிலா
மறைமனக்காடிரிய நின்னருள் புரப்பதே
        மாமுத்து க்ருஷ்ணபுரிவாழ்
மாரிசுகுமாரிகருணாரி வரதாரியருண்
        மாரிசொல்லம்மை யுமையே.

(இ-ள்) நறைதுளிர்த்திடும்—தேனைபெருகவைக்கும், மலர்க்காடுபூத்தென்ன—செந்தாமரைவனம் புஷ்பித்ததொக்க, வொளிர்—விகாசமான, நாயகி—அம்மையே, நந்து—சிப்பிகள், உதிர்த்திடும்—கொட்டிவைக்கும், நவமான—தாவள்ளியமான, நித்திலக்

கோர்வை—முத்துச்சரம், பூண்—கட்டுண்டு, ஒழுகுமணி-தொங்கல் இரத்தினத்துடன், நந்தமர்க்கு-அடியார்க்கு, காட்சியென்ன-சேவையதாமென்னவிளக்கும், சிறைபளிக்குழு—இரக்கைகளோடுங்கூடிய வண்டுகளின் கூட்டம், அலர்த்தும்—கீண்டும், அரிய மலராட—வாசனைதங்கிய புஷ்பங்கள் மணம்வீச, சிறுவண்டின்—சிறியவண்டுகளின், இசையினுர்ப்ப—கீதமொலிக்க, சீலமணி—பரிசுத்தமான வைரமென்ன, நவரத்னகோலமணி—ஒன்பதுவித வர்ணமைந்த அழகிய ரத்தினங்களென்ன, செய்யமணி—சிகப்பமைந்த ரத்தினங்களென்ன, சீர்—இவைகளை பரிசுத்தக்ரமமாக, அணிந்திடும்—கொண்டுவிளக்கிடும், முத்தமி—சுசீலையே, கறைமனத்தவன்—கபடமுள்ள குணத்துடையேன், யென-என்பதாக, கருதாது—நினையாது, எனக்கு—என்றனுக்கு, உன்னருள்காண—நின்கடாக்ஷத்தைப் பெற, வந்திடுதலமையும்—நீ எழுந்தருளல் ஒக்கும், காணுதகாட்சியொன்று—நின்னைத் தரிசிக்காத காட்சி ஒன்று, உளதெனு—உண்டென்பதின், உரை—பேச்சானது, கட்டுரை—வீண்வார்த்தை, யெனும்—என்று சொல்லப்படும், கதியிலா—வேறு அடைக்கலமில்லா, மறைமனம்—மயக்கமுள்ள மனத்தவனின், காடிரிய—பாவம்பாற, நின்னருள்—உன்னிட கருணையை, புரப்பதே—செய்வதேதகும், மாமுத்துகிருஷ்ணபுரிவாழ் மாரியே. (எறு)

சூனியப்பில்லி பேதாளம் வைரவிமுனி
சுட்டறுக்கும் காளிபேய்
துட்டகுட்டிச்சாத்த னிராக்கதச்சாமுண்டி
தொலைவில்லி மாடன்சாத்தன்
மேனியைப்பழிவாங்கு மருளவிருளன்வீரி
மிகைகாட்டும் வாய்ப்பேயுமன்
வீறிடும்மோரி பெத்தண்ணன் மங்காதவெவ்
வீச்சியின நகைகாட்டிடும்
கானிலந்தனிலாடு காட்டேரிகவைகூளி
கஞ்சுகத்தாயி கண்ணி
கலகலப்புக்காரி மிண்டியோர்கால்காட்டும்
காதகக்கொண்டிசண்டி

175971

மானிலந்தனிலருந் தும்மாயமிரியவருள்
மாமுத் துக்ருஷ்ணபுரி வாழ்
மாரிசுகுமாரிகருணரி வரதாரியருண்
மாரியெல்லம்மை யுமையே.

(இ-ள்) குளியப்பில்லி—தந்திரமாய் வதைக்கும் பில்லியென்னும் பைசாசமும், பேதாளம்—இராக்கதப் பைசாசமும், வைரவமூளி—கணங்களைப்போன்று தேகாத்தியந்தம் ஒடுக்குள்ளபேயும், சுட்டறுக்குங்காளிபேய்—தீவாளினாற் சுட்டறுக்கும் சுருப்பாகிய பேயும், குட்டருட்டிச்சாத்தான்—கொம்மைதங்கிய சிறுவுருவத்தானான சாத்தன்பேயும், இராக்கதச்சாமுண்டி—அரக்கனைப் போன்ற வலிய சாமுண்டிப்பேயும், தொலைவில்லி—தூரத்திலிருந்து வெருட்டும் வில்லிப்பேயும், மாடன்—கண்காட்டி மருட்டும் மாடனென்கிற பேயும், சாத்தன்—சாரிவந்து முறைப்பாடுகாட்டும் சாத்தனும், பேனிவைப்பழிவாங்கும்—தேகத்தையே வதைக்கும், மருளனிருளன்—மருட்டும் இருளனும், வீரி—கூச்சலிடும் ருப்பும், மிகைகாட்டும் வாய்பேயும்—இருளில் அதிசச் சேட்டை வாயினின்று வோசையிடும் பேயும், முன்வீறிடும்—முன்னால் நின்று சப்திக்கும், வோரி—வோரியென்கிற பேயும், பெத்தண்ணன்—பெரியண்ணனென்கிற அலகையும், மங்காத வெவ்விச்சி—குறையாது கொடுமையுண்டாக்கும் விச்சியென்கிற பைசாசமும், விளகைகாட்டும்—பரிகாசச்சிரிப்பைத் தெரிவிக்கும், கானிலந்தனிலாடு காட்டேரி—வனந்தனிலேயும் எல்லைப்புறங்களிலேயும் ஆடுகின்ற காட்டேரியும், கவைகூளி—கூட்டகூளியும், கஞ்சுகத்தாயி—எலும்பை மாலைபூண்ட ஆயியென்கிற அலகையும், கண்ணி—பார்க்கப்படாத பெருங்கண்ணியுடைய பேயும், கலகலப்புக்காரி—சதங்கைபோற் சப்திக்கும் காற்றுப்பேயும், மிண்டி—மடக்கும் பேயும், ஓர்காலகாட்டி—நிடுக்கென ஓர் காற்றை பரிசிக்கச் செய்து பயக்கும் பேயும், காதகக்கொண்டிசண்டி—உபத்திரவமும் பரிகாசமும் செய்கின்ற சண்டியென்னும் பேயும், மானிலந்தனில்—இப்பூமியின்கண், லருந்தும்—தொந்தரைசெய்யும் பேய்களின், மாயமிரிய—செப்பைதொடாது, அருள்—கடாக்ஷத்தை செய்யும், மாமுத்துக்ருஷ்ணபுரிவாழ் மாரியே. (எறு)

அங்கசௌந்தரவல்லி யானந்தவல்லிநல
  மாக்குமதிவல்லி யருணைத்
தமலநிறவல்லி வரமருளனந்தத்தல்லி
  ஆமருவு பூவல்லினேர்
கொங்குபூந்தொடைவல்லி கோகனகபதவல்லி
  குணவல்லி மணவல்லிசெங்
குவளைபூத்திடுமதர வல்லிகட்கடையமுத
  குவிவல்லி கவிவல்லியே
செங்கமலவல்லிதுணை நேரவருள்கொண்டடியர்
  திறமறிந் தருளும்வல்லி
தெய்வநிலைபருள்வல்லி யுப்புமருள்தரும்வல்லி
  செய்யுமுபகாரவல்லி
மங்கைபரமேச்வரி வந்தருளிடுஞ்செல்வி
  மாமுத்து க்ருஷ்ணபுரிவாழ்
மாரிசுகுமாரிகருணாரி வரதாரியருண்
  மாரியெல்லம்மை யுமையே.

(இ-ள்) அங்கசௌந்தரவல்லி—தேகத்தின் வனப்பினலமைந்த அழகே ஒருருவானவளே, யானந்தவல்லி—உலகின்கண்ணுள்ளஜீவராசிகளின் க்ஷேமத்தைக்கோரி யானந்தமடைபவளே, நலமாக்குமதிவல்லி—கெட்டவரையும் நல்லோராயாக்கும் அறிவினையுடையாளே, அருணைத்தமலநிறவல்லி—பிரகாசமான ஸ்படிக வர்ணத்தாளே, வரம்—வரங்களை, அனந்தம்—அதிகமாக, அருள்—கிருபைசெய்யும், தல்லி—தாயே, ஆமருவு பூவல்லி—அடைக்கலமான உலகத்தவரை ரக்ஷிக்குமவளே, நேர்—அழகிய, கொங்குபூந்தொடை—மகரந்தஞ் சிவந்தும் மலர்மாலையை ஹாரமாக வணிபவளே, கோகனகபதவல்லி—தாமரைநிகர்த்த திருவடியுடைத்தானவளே, குணவல்லி—நற்குணமுடையவளே, மணவல்லி—இயற்கைவாசனையுடையாளே, செங்குவளைபூத்திடும்—செவ்விய குவளைமலர் மலர்ந்தனபோன்ற, அதரவல்லி—திருப்பவளமுடையாளே, கட்கடையமுதம்—கடைக்கணிக்கும் கிருபை, குவிவல்லி—தருபவளே, கவிவல்லியே—சாஸ்திரமறிந்தவளே, செங்கமலவல்லிதுணை—செந்தாமரையிலவதரித்த இலக்ஷ்மியின் கடாக்ஷத்தை, நேரவருள்கொண்டு—பெரும்படியான க்ருபையைப் பெற்று, அடியர்—தொண்டர்தமக்கு, திறமறிந்து—புக்தியின்றி

லையறிந்து, அருளும்வல்லி—கொடுக்கும் பெரியாளே, தெய்வ நிலை—கடவுளின் றன்மையை, அருள்வல்லி—காட்டுபவளே, உய்யுமருள்—கடைத்தேறும் க்ருபையை, தரும்வல்லி—செய்யவல்லவளே, உபகாரம்—நன்மை, செய்யும்—செய்யும்படியான, வல்லி—அமுதமொத்தவல்லியே, மங்கை—பெதும்பைப் பருவமுடையாளே, பரமேச்வரி—தாயே, வந்தருளிடும்—இங்கு எழுந்தருளி கடாக்ஷஞ்செய்யும். செல்வி—ஈச்வரியே, மாமுத்துக்ருஷ்ணபுரிவாழ் மாரியே. (எ-று)

ஸம்பூர்ணம்.

வாழிப்பனுவல்.

வாழி முத்துக்ருஷ்ணபுரி வாழ்வினர்
வாழி யாரியநாட்டிடை மக்களும்
வாழி மாதவியா மெல்லையம்மன் சீர்
வாழி யின்னூல் வழங்குநர் வாழியே.

175971

(இ-ள்) முத்துக்ருஷ்ணபுரி—பரங்கிப்பேட்டை என வழங்கும் முத்துக்ருஷ்ணபுரியிலுள்ள, வாழ்வினர்—வாழ்வைக்கொண்டவர்கள், வாழி—பலவாண்டு வாழ்க, ஆரியநாடு—செளிக்கமனத்துடையதும், செல்வமிகுந்ததுமாகிய நகரத்தில் வாழ்க்கையைக்யுடை—கொண்ட, மக்களும்—கங்கை புத்திரர்களான சந்திரகுலப்பான்மையரும். வாழி—பல்லாண்டு ஆயுளாரோக்ய திடகாத்ரராய் வாழ்க, மாதவியாம்—பெருமையும் தெய்வநிலையும் க்ருபாகடாக்ஷ விசேஷம்யமான அருளுந்தந்து காத்துரக்ஷிக்கும், எல்லையம்மனும்—இழநடல் எல்லையாகக்கொண்டு நிவாசிக்கும் எல்லையம்மனெனப் பெயர்கொண்ட மகமாரித்தாயும், வாழி—அளவு கடந்த கற்பம் வாழ்க, இன்னூல்—இப்பதிகத்தை, வழங்குநர்—பத்தி சிரத்தையுடன் வாசிப்பவரும் பிறருக்குத் தெளிபவுரைக்குமவரும், வாழியே—நீடூழியாக வாழ்க. (எ-று)

ஸ்ரீ அகிலாண்ட கோடி ப்ரமாண்டநாயகியான
எல்லையம்மன் திருவடிகள் வாழ்க.

முற்றிற்று.